Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 051 | வியாழக்கிழமை Thursday | 21.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# மருத்துவம், ஊரகநலப் பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்கள்

## முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்



சென்னை: மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்கள் வழங்கிய நிகழ்ச்சியில், முதலமைச்சர் விஜய் ஒரு வாகனத்தை இயக்கி பார்த்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் இன்று (மே 20) தலைமைச் செயலகத்தில் 2.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 40 புதிய வாகனங்களை வழங்கும் வகையில், அவ்வாகனங்களுக்கான சாவிகளை ஒட்டுநர்களுக்கு வழங்கினார். அதனைத்தொடர்ந்து, அதில் ஒரு வாகனத்தை முதலமைச்சர் விஜய் இயக்கி தொடங்கி வைத்தார்.

மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலுள்ள ஸ்கேன் மையங்களில் கருவுறுதலுக்கு முன், கருவுறுதலுக்கு பின் பாலின தேர்வு தடைச் சட்டம் 1994-ன் படியும் மற்றும் தமிழ்நாடு மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்துதல் சட்டம் 1997-ன் படியும் சட்ட விதிகள் பின்பற்றப்படு கிறதா என்பதைக் கண்காணிக்கவும், முறையாக பதிவு பெறப்பட்டு இயக்கப்படுகிறதா என்பதை ஆய்வு மேற்கொள்ளவும் இந்த வாகனங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

மேலும், பேரிடர் மற்றும் பெருந்தொற்றுக் காலங்களில் மக்களுக்குத் தேவையான மருத்துவப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மக்களுக்கு தேவையான உரிய சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், போலி மருத்துவர் மீது விரைந்து விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கைஎடுக்கவும் புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருண்ராஜ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, திராவிட பேரொளி பண்டிதர் அயோத்திதாசரின் 181-வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் விஜய் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

1845 ஆம் ஆண்டு மே 20 அன்று மெட்ராஸ் மாகாணத்தில் பிறந்த பண்டிதர் அயோத்திதாசர், சிறந்த எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், பதிப்பாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர் என்ற பன்முக ஆற்றலைக் கொண்டவர்.





ஏற்றத்தாழ்வு மிக்க சமூகங்களைக் கண்டு வெகுண்டெழுந்து சமூக சீர்திருத்தப் பாதையில் தனது பயணத்தை தொடங்கி சாதி ஒழிப்பையும், சமூக விடுதலையையும் தனது லட்சியமாகக் கொண்டிரு ந்தார். சித்த மருத்துவம் பயின்று, சிறந்த சித்த மருத்துவராக விளங்கியவர்.

கைம்பெண் மறுமணம், பெண்களுக்கு தொழிற்கல்வியில் இடஒதுக்கீடு, சம உரிமை ஆகியவற்றைக் கோரிய காரணத்தால் இவர் 'தென்னிந்தியாவின் சமூக சீர்திருத்தங்களின் தந்தை என்று அழைக்கப்பட்டார். இவரின் பிறந்த நாள் ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

# பத்தாம் வகுப்பு முடிவுகள் வெளியீடு; தமிழகத்தில் 94.31% பேர் தேர்ச்சி

## புதுக்கோட்டை மாவட்டம் முதலிடத்தை பிடித்தது




சென்னை: தமிழகத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுமுடிவுகள் (மே 20) வெளியானது. தேர்வு எழுதிய மாணவர்களில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது. தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

தமிழக பள்ளிக் கல்வி பாடத் தி ட்ட த்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு(மார்ச் 2026) கடந்த மார்ச் 11-ம்தேதி தொடங்கி க டந்த ஏப் .6-ம் தேதி நி றைவடைந்தது. சுமார் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதினர். தொடர்ந்து விடைத்தாள் திரு த்த பணிகள் தொ டங்கி நிறைவடைந்தது. இந்நிலை யில், இன்று சென்னை - அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தேர்வு முடிவுகளை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்.

மொத்தம் 8.82 லட்சம் மாணவர்கள் இந்த தேர்வை எழுதியதாக அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். இதில் 94.31 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

வழக்கம்போலவே இந்த முறையும் தேர்ச்சி விகிதத்தில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே முன்னிலை வகிக்கின்றனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 92.15 சதவீதம், மாணவிகளின் எண்ணிக்கை 96.47 சதவீதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மாணவர்களை விட 4.32 சதவீதம் அதிகமாக மாணவிகள் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்.

கடந்த ஆண்டு (2025) 8,71,239 பேர் தேர்வெழுதி, அதில் 8,17,261 பேர் தேர்ச்சி பெற்றனர். அது 93.80 சதவீத தேர்ச்சி ஆகும். கடந்த ஆண்டு பொதுத் தேர்வை விட இந்தாண்டு 0.51 சதவீதம் பேர் கூடுதலாக தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாவட்ட அளவில் தேர்ச்சி விகிதத்தை பொறுத்தவரையில் புதுக்கோட்டை (97.57%), சிவகங்கை (97.54%), தஞ்சாவூர் (97.41%), திருச்சி (97.31%), கன்னியாகுமரி (97.30%) மாவட்டங்கள் முதல் 5 இடங்களை பிடித்துள்ளன.

அரசு பள்ளிகளின் ஒட்டுமொத்த தேர்ச்சி விகிதம் 91.66 சதவீதம் என பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.

பாட வாரியாக தேர்ச்சி விகிதம்:

தமிழ் - 98.43%, ஆங்கிலம் 99.44%, கணிதம் 97.36%, அறிவியல் 98%, சமூக அறிவியல் 97.93%.

நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்ற மாணவர்கள்:

தமிழ் - 34 , ஆங்கிலம் - 93, கணிதம் 3194, அறிவியல் - 10476, சமூக அறிவியல் - 3336 மாணவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றுள்ளனர்.

இந்தாண்டு 10-ம் வகுப்பு பொதுத்தேர்வை 12,467 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் எழுதினர். இதில் மேல்நிலைப் பள்ளிகள் 7,490, உயர்நிலைப் பள்ளி 4,977 ஆகும். இதில் 5,171 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன. 8,233 பள்ளிகள் 95 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

குறிப்பாக இதில் 1,931 அரசு பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன. 3,463 அரசு பள்ளிகள் 95 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

அரசு பள்ளிகள் 91.86 சதவீதம் தேர்ச்சி

அரசு பள்ளிகள் மாணவர்கள் 91.86 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். அரசு உதவிபெறும் பள்ளிகள் 94.34 சதவீதமும், தனியார் பள்ளிகள் 98.14 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளன. இருபாலர் பள்ளிகளில் 94.42 சதவீதமும், பெண்கள் பள்ளியில் 96.42 சதவீதமும், ஆண்கள் பள்ளியில் படித்த 88.50 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஆண்கள் பள்ளிகளை விட 7.92 சதவீதம் பெண்கள் பள்ளிகள் கூடுதலாகவும், இருபாலர் பயிலும் பள்ளிகள் ஆண்கள் பள்ளிகளைவிட 5.92 சதவீதம் கூடுதலாகதேர்ச்சி அடைந்துள்ளன.

**வரி விளம்பரங்கள்**




தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# தமிழகத்தில் வரும் 23ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை: தமிழகத்தில் திருத்தணி, சென்னை மாவட்டங்களில் 104 டிகிரி வெயில் கொளுத்தியது. அதே நேரத்தில் பல இடங்களில் மழையும் பெய்துள்ளது. இதையடுத்து, 23ம் தேதி வரையில் சில இடங்களில் கனமழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது. தெற்கு கடலோரத்தில் ஆந்திரா வரையில் நீடித்துள்ள வளி மண்டல காற்று சுழற்சி காரணமாக தமிழகத்தில் நேற்று அனேக இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 163 மிமீ மழை பதிவாகியுள்ளது. வெப்பநிலையை பொருத்தவரையில் ஓரிரு இடங்களில் இயல்பைவிட 3-4 டிகிரி செல்சியஸ் வரையில் வெப்பநிலை உயர்ந்தும் பிற இடங்களில் வெப்பநிலையில்மாற்றம்ஏதும் இல்லை.



இருப்பினும், திருத்தணி, சென்னை மாவட்டங்களில் நேற்று 104 டிகிரி வெயில் கொளுத்தியது. வேலூர் 102டிகிரி, மதுரை, ஈரோடு, திருச்சி 100 டிகிரி வெயில் நிலவியது. இந்நிலையில், வளி மண்டலத்தில் சுமார் 1.5 கிமீ உயரத்தில், கிழக்கு உத்ர பிரேதசம் முதல் லட்சத்தீவு வைரயும், மத்திய மகாராஷ்ட்ரா, மரத்வாடா, உள் கர்நாடகம்,கேரளம் வழியாகஒருவளிமண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதையும், சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரத்தில் தெற்கு கடலோர ஆந்திரப் பிரதேசம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சியும் நிலை கொண்டுள்ளது.

அதேபோல, தென்கிழக்கு அரபிக் கடல் மற்றும் அதை ஒட்டிய லட்சத்தீவுப் பகுதிகளில் இருந்து தெற்கு கடலோர ஆந்திரப் பிரதேசம் வரை கேரளா,தெற்கு உள் கர்நாடகம் மற்றும் ராயலசீமா வழியாக ஒரு வளி மண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலை கொண்டுள்ளது. நீலகிரி, கோவை, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல்,மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், இடி மின்னலுடன் இன்றும் மழை பெய்யும்.

மேலும்,22ம் தேதியில், நீலகிரி, கோவை, தேனி, ஈ ரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழைபெய்யும்.இதே நிலை 23ம் தேதி வரை நீடிக்கும். வெப்பநிலையில் பெரிய அளவில் மாற்றம் ஏதும் இருக்காது. இந்நிலையில், சென்னையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன்கூடிய லேசான மழை பெய்யும். வெப்பநிலை 102 டிகிரி வரை இருக்கும்.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



மதுரை மாநகராட்சி மண்டலம்–1, வார்டு எண் 16, கோ.புதூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள காய்ச்சல் வார்டு, பதிவு செய்யும் இடம், உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும், மருத்துவமனையில் குடிநீர் வசதியை மேம்படுத்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். சிகிச்சைக்காக வந்திருந்த பொதுமக்களிடம் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் முறையாக செலுத்தப்பட்டுள்ளனவா என்றும், அவர்களின் பெண் குழந்தைகள் தமிழ்நாடு அரசின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனரா என்றும் கேட்டறிந்தார்.



தென்காசியில் இன்று நடைபெற்ற தனியார் பள்ளி வாகனங்களின் ஆய்வு மாவட்ட ஆட்சித் தலைவர் கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.இதில் பண்பொழி மீனாட்சிபுரம் ஜோசப் பள்ளி வாகனம் பழுதடைந்து இருப்பதை கண்டு வாகனத்தை சரி செய்த பின்னரே சான்று வழங்க வேண்டும் என வட்டார போக்குவரத்து அதிகாரிக்கு ஆட்சியர் உத்தரவு.

# தமிழகத்தின் ஒபென் எலக்ட்ரிக் நிறுவனத்தின் நெட்வொர்க் தற்போது கோவையில் ரோர் ஈவோ எனும் இவெய்க்கிள் அறிமுகம் செய்துள்ளது

## கடந்த 15 நாட்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்பதிவுகள் செய்து அசத்தல்



தமிழகத்தில் ஒபெண் எலக்ட்ரிக்நிறுவனத்தின் நெட்வொர்க் தற்சமயம், கோவை, தேனி, சேலம், காரைக்குடி, மற்றும் கடலூர் பகுதிகளில் தங்களது கிளைகளை துவங்கியுள்ளது. இந்தியாவின் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் தயாரிப்பு நிறுவனமான இந்த நிறுவனம், ஒபென் ரோர் ஈவோ எனும் புதிய எலக்ட்ரிக் வாகனங்களை அறிமுகம் செய்துள்ளது. இதன் அறிமுக விழா, கோவை இராமநாதபுரம் பகுதியில் உள்ள, ஒபென் எலக்ட்ரிக் நிறுவனத்தில் நடைபெற்றது.இதனை,ஒபென் நிறுவனத்தின் நிறுவனரும், முதன்மை செயல் அதிகாரியுமான மதுமிதா அகர்வால் அறிமுகம் செய்து வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறியதாவது...

ரோர் ஈவோ எனும் புதிய எலக்ட்ரிக் வாகனத்தின் அறிமுகம் இன்று நடைபெற்றது. இந்தியா முழுவதும் 18 மாநிலங்களில் இந்நிறுவனத்தின் கிளைகள் உள்ளது.. அதே சமயம் ஒரு ஆண்டில், 1 லட்சம் வாகனங்களை தயாரிக்கும் அளவுக்கு மிகபெரியதொழிற்சாலைகளை வைத்துள்ளதாகவும், தற்போது அறிமுகம் செய்யபட்டுள்ள இந்த ரோர் ஈவோ வாகனங்கள், அறிமுக விலையாக 99,999க்கு தமிழகம் முழுவதும் 10,000 வாடிக்கையாளர்களுக்கு வழங்க உள்ளதாகவும், மேலும் 777 க்கு முன்பதிவு செய்யபடுகின்றதாகவும் தெரிவித்தார். இந்த வகை வாகனம் ஒரு முறை முழுவதும் பேட்டரி சார்ஜ் செய்தால் 180 கிலோமீட்டர் தூரம் செல்லக்கூடியது. இந்த வகை வாகனத்திற்கு கிடைத்துள்ள ஆதரவு, பொதுமக்கள் மத்தியில் ஒரு நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது. இதுவே இந்த வகை வாகனத்தின் வெற்றி என நம்புவதாக தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### 2000 ஆண்டுகளுக்கு முன்பு கல்லாக வழங்கப்பட்ட மந்தை அம்மன் பிறகு

# 500 ஆண்டுகளுக்கு முன்பு கோவில் கட்டி கும்பாபிஷேகம் மூன்றாவது முறையாக வெகு சிறப்பாக நடைபெற்றது



திருமங்கலம் ராஜதானி இராஜதானிமேல உரப்பனூர் கிராமத்தில் சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த மந்தை அம்மன் கோவில் மற்றும் விநாயக கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

திருமங்கலம் திருமங்கலம் ராஜதானி மேல உரப்பனூர் கீழ உரப்பனூர் கிராமங்களைச் சேர்ந்த கிராமங்களைச் சேர்ந்த பகுதியில் பகுதியில் மந்தை திடலில் ஊர் நடுவில் அமைந்துள்ள மந்தை அம்மன் கோவில் மற்றும் விநாயகர் கோவிலில் மூன்றாவது முறையாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

மந்தை அம்மன் கோவில் ஆனது2000 ஆண்டுகளுக்கு முன்பு கல்லாக வைத்து வழிபட்டதாகவும் முன்னோர்கள் கூறியதாகவும் அதன் பிறகு கோயில் கட்டி சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோவில் ஒரு ஊர் நடுவே பொதுமக்கள் வழிபட்டு மேல உரப்பனூர் கீழ உரப்பனூர் போன்ற கிராமங்களில் இருந்து வரும் மூன்றாவது முறையாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது

அருகில் உள்ளகிராம மக்கள் சுமார் 5000க்கும் மேற்பட்டோர் இந்த கும்பாபிஷேகத்தில் பங்கேற்றனர் கோபுர கலசத்தின் மீது புனித நீர் ஊற்றப்பட்டது

கும்பாபிஷேகம் நடைபெற்றது வேள்விகள் நடத்தியும் மந்திரங்கள் ஓதியும் கும்பாபிஷேகம் நடைபெற்றது பிறகு கோவிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானமும் பிரசாதமாக வழங்கப்பட்டது பிறகு கோயிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கு அன்னதானமும் பிரசாதமாக வழங்கப்பட்டது

# நம்மை நாம் பலப்படுத்தினால் கூட்டணியே இல்லாமல் வெற்றி பெறலாம் தூத்துக்குடியில் கனிமொழி எம்.பி. பேச்சு




தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி எட்டையாபுரம் சாலையில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று நடைபெற்றது. தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கீதா ஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் திமுக துணைப் பொது செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு, நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி; எதிர்பார்க்காத சூழலில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நாம் செய்திருக்கும் மிகச் சிறப்பான திட்டங்களை மக்கள் உணர்ந்து கொண்டு, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள அனைவரையும் சென்றடையும் பயனுள்ள திட்டங்களை தமிழக மக்களுக்காக முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

தமிழக மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகப் போராடியிருக்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்த மக்கள் நமக்கான வெற்றியை வழங்குவார்கள் என்று திடமாக நம்பியிருந்த நேரத்தில், மக்கள் பல்வேறு காரணங்களால் வேறு ஒரு முடிவை எடுக்கக்கூடிய சூழலை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். அத்தனை பேருக்கும் தெரியும். தேர்தல் வெற்றி,தோல்வி என்பது நமக்கு புதிதான ஒன்றில்லை. எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளை கண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். தலைவர் கலைஞர் அவர்கள் தோல்வியை சந்தித்த பிறகும், அடுத்த சில தினங்களிலேயே நன்றி அறிவிப்பு கூட்டத்தை அறிவித்து, கழக தோழர்களை உற்சாகப்படுத்தி, தொடர்ந்து இந்த இயக்கத்தை உயிர்ப்போடு வைத்திருந்தார்கள் என்பது இங்கே உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் தெரியும்.

அதேபோல், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், யாராலும் ஜீரணிக்க முடியாத தேர்தல் தீர்ப்புக்குப் பிறகும் தன்னுடைய தொகுதிக்கு சென்று, தனக்கு வாக்களிக்காத மக்களுக்குக்கூட நன்றி தெரிவித்தார்கள். அங்கு மக்கள் கலங்கி நின்ற சூழலிலும், அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

எந்தவித தயக்கமும் இல்லாமல் அவர்களுடன் பேச வேண்டும்; அந்த நேரத்தில் அவர்கள் மட்டுமே இருக்க வேண்டும், அவர்களுடன் வேறு யாரும் இருக்கக் கூடாது என்பதையும் தலைவர் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் அவர்கள், தாம் வெற்றி பெறாவிட்டாலும், மாவட்டத்தில் உள்ள இரண்டு தொகுதிகளில் வெற்றியை பெற்றுத்தந்துள்ளார். அதற்காக அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோவில்பட்டி வெற்றி என்பது எனக்கு நம்பமுடியாத அளவிற்கு மகிழ்ச்சியான செய்தியாக இருந்தது. அந்த தொகுதியில் திமுக போட்டியிடும் வாய்ப்பு அதிகமாக கிடைத்ததில்லை. எப்போதும் அது கூட்டணிக் கட்சிகளுக்குச் செல்லக்கூடிய சூழல்தான் இருந்து வந்தது.

நீண்ட காலத்திற்குப் பிறகு முதல் முறையாக நமக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அந்த வாய்ப்பை தவறவிடாமல், அந்த தொகுதியில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். அந்த வெற்றியை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் எல்லா இடங்களுக்கும்செல்லும்போது, "கூட்டணி கட்சிகளுக்கு இடம் கொடுக்காமல், திமுக நேரடியாக போட்டியிட வேண்டும்" என்று பலரும் தொடர்ந்து கூறுவார்கள். நான் கூட வேடிக்கையாக, "கூட்டணி வேண்டாமா?" என்று கேட்பேன்.

கூட்டணிகளை பற்றி நாம் சிந்திக்க வேண்டிய ஒரு காலகட்டத்திலே நின்று கொண்டிருக்கிறோம். ஆனால், முதலில் நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மை பலப்படுத்திக் கொண்டால், யாருடைய உதவியும் இல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தால் வெற்றி பெற முடியும்; அதை வென்று காட்டுவோம். நாம் யார் என்பதை விரைவில் நிரூபிப்போம் என்று பேசினார். இந்த நிகழ்வில், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா. கருணாநிதி, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பந்தலூர் பஜாரில் துர்நாற்றம் குப்பைகள் அகற்றாததால் பொதுமக்கள் அவதி



பந்தலூர் தாலுக்கா தலைமையிடமாக உள்ளதால் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசு பணி மற்றும் மருத்துவ தேவைக்கு வந்து செல்கின்றனர்.

அதுபோல நெல்லியாளம் நகராட்சியின் நகராட்சி அலுவலகம் இங்குதான் செயல்படுகிறது. இந்நிலையில் பந்தலூர் பஜார் பகுதியில் இந்தியன் வங்கி அமைந்துள்ள நகராட்சி வளாகம் பகுதியில் சில நாட்களாக குப்பைகள் குவித்து வைக்கப்பட்டு உள்ளது. குப்பைகள் முறையாக அகற்றப்படாமல் தேங்கி கிடப்பதால் கடும் இந்த பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள், கடை நடத்துவோர் மற்றும் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

சாலையோரங்களில் உணவு கழிவுகள், பிளாஸ்டிக் பொருட்கள், வாழைதண்டுகள், காய்கறி கழிவுகள் உள்ளிட்ட குப்பைகள் குவிந்து கிடப்பதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், குப்பைகள் தேங்கியுள்ள பகுதிகளில் கொசு உற்பத்தி அதிகரிக்கும் அபாயமும் உருவாகியுள்ளது.

மேலும், பஜார் பகுதிக்கு தினமும் ஏராளமான மக்கள் வருகை தரும் நிலையில், துர்நாற்றம் காரணமாக பொதுமக்கள் முகம் சுளிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. வணிக நிறுவனங்களுக்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நெல்லியாளம் நகராட்சி அலுவலர்கள் அடிக்கடி செல்லும் இந்த பகுதியில் கிடக்கும் குப்பையை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்காதது பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. நகர பகுதியில் இந்த நிலை என்றால் மற்றபகுதிகளில் என்ன நிலை என்ற கேள்வியும் எழுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்து குப்பைகளை அகற்றி, தினசரி தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் மற்றும் கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

## நடைபெற்று வரும் பல்வேறு துறைச் சார்ந்த பணிகளை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



தூத்துக்குடி மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்பிடி துறைமுகத்தின் ஏலக்கூடத்தினை பார்வையிட்டு, விசைப்படகுகளின் தொழிற்முறையினை கேட்டறிந்து,மீன்பிடி துறைமுகத்தில் நடைபெறும் உட்கட்டமைப்பு பணிகளை ஆய்வு செய்தார். பின்னர் மீன்பிடிதுறைமுகத்தில்வருகைபுரிந்த மீனவர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு குடிநீர்வடிகால்வாரியம் சார்பாக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள 6 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 363 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் ஜல்ஜீவன் மிஷன் நிதியுதவியுடன் ரூ.515.72 கோடி திட்டமதிப்பீட்டில் கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், சேதுராமலிங்கபுரத்தில் செயல்பட்டு வரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை (16.57 MLD) பார்வையிட்டார். தாமிரபரணி ஆற்றின் 7வது அணைக்கட்டான மருதூர் அணைக்கட்டினை பார்வையிட்டு, அணையின் நீரியல்விபரம்,நீர்வரத்து, நீர் வெளியேற்றம் மற்றும் கடந்த 2023-ம் ஆண்டு பெருவெள்ளத்தின்போது ஏற்பட்ட பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், வசவப்பபுரம் பகுதியில் ஆதரவற்ற, கைவிடப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கப்படும் முதியோர் கருணை இல்லத்தினை பார்வையிட்டு, அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக செயல்பட்டு வரும் விழுதுகள் - வட்டார அளவிலான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை பார்வையிட்டார்.

வேளாண்மை - உழவர் நலத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகள் கிடைக்கும் பொருட்டு கருங்குளம் வட்டாரம், கிள்ளிகுளத்தில் அமைந்துள்ள விதை சுத்திகரிப்புநிலையத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களில் இருந்தும் நெல் விதைகள், உளுந்து விதைகள் போன்ற விதைப் பண்ணைகள் அமைத்த விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டு, சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வரும்விபரங்கள் குறித்து மாவட்டஆட்சியர்அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, இருப்பு வைக்கப்பட்டிருந்த நெல்,உளுந்து விதை சுத்திகரிப்பு பணிகள் மற்றும் சான்று அட்டை பொருத்தப்பட்ட விபரங்களை நேரில் ஆய்வு செய்தார். விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தரமான சான்று பெற்றவிதைகள்கிடைக்க ஏதுவாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.

பின்னர், வல்லநாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, மருந்துகளின் இருப்பு, மருத்துவபயனாளிகளுக்கு வழங்கப்படும்சிகிச்சைமுறைகள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், கேட்டறிந்தார்.

ஆய்வின் போது, தூத்துக்குடி மண்டல மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் இளம்வழுதி, வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணகுமார், செயற்பொறியாளர், நீர்வளத்துறை, கீழ்தாமிரபரணி மற்றும் கோரம்பள்ளம் ஆறு வடிநிலக் கோட்டம் தங்கராஜன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மனோரஞ்சிதம்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம், உதவி நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மகேஷ் குமார்,தூத்துக்குடி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் கு.அ.புஷ்ரா ஷப்னம், தோட்டக்கலை உதவி இயக்குநர்ஜெயந்தன், திருவைகுண்டம் வட்டாட்சியர் தாஹிர் அஹமது மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## தூத்துக்குடியில் ரூ.136.35 கோடி அதிநவீன உயர் சிறப்பு மருத்துவமனைக் கட்டிடத்தை ஸ்ரீநாத் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு

தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சுமார் 136.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அதிநவீன உயர் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்தைத் தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஸ்ரீநாத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரத் தென்மாவட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு உலகத்தரம் வாய்ந்த உயர்தர மருத்துவச் சிகிச்சைகள் இலவசமாகக் கிடைக்கப் பெற வேண்டும் என்ற நோக்கில், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் புதிய மல்டி ஸ்பெஷாலிட்டி கட்டிடப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. தற்போது சுமார் 136.35 கோடி ரூபாய் பெரும் மதிப்பீட்டில் இந்த அதிநவீன உயர்சிறப்பு மருத்துவமனைக் கட்டிட உள்கட்டமைப்புப் பணிகள் முழுமையாகக்கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய மருத்துவக் கட்டிடத்தில் மருத்துவ உபகரணங்கள் பொருத்தும் பணிகள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்குத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்துத் தூத்துக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஸ்ரீநாத் நேற்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். மேலும் அவர் மருத்துவமனையின் பல்வேறு வார்டுகள், அறுவை சிகிச்சை அரங்குகள் உள்கட்டமைப்பு வசதிகள், குடிநீர் மற்றும் மின்சார விநியோகக் கட்டமைப்பு ஆகியவற்றை அவர் தளம்வாரியாகச்சென்று பார்வையிட்டார். ஆய்வின் போது, மருத்துவக் கல்லூரி டீன், மூத்த மருத்துவர்கள்,பொதுப்பணித்துறை அலுவலர்கள் மற்றும் தவெக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

## தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் பரம்பரை அறங்காவலர்களுக்கு உரிய அங்கீகாரம் வேண்டும்

### தமிழக முதலமைச்சர் விஜய்க்கு தமிழ்நாடு திருக்கோயில்களின் பரம்பரை அறங்காவலர்கள் சங்கத்தினர் முக்கிய கோரிக்கைகள் முன்வைத்தனர்



தமிழ்நாடு திருக்கோயில்கள் பரம்பரை அறங்காவலர்கள் சங்கம் சார்பில், தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய் அவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நிகழ்வும் ஆலோசனை கூட்டமும் கோவை சுந்தராபுரம் பகுதியில் நடைபெற்றது.

நிகழ்வைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த சங்கத்தின் தலைவர் ஆர். கிருஷ்ணசாமி, முதலமைச்சர் விஜய்க்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் காமராஜர் அவர்களின் நேர்மையான மற்றும் மக்கள் நல ஆட்சிமுறையை முன்னுதாரணமாகக் கொண்டு, புதிய முதல்வர் சிறப்பான ஆட்சியை வழங்க வேண்டும் என கூறினார்.

இதேவேளை, இறைவனின் அருளும், தமிழகத்தில் உள்ள 3000-க்கும் மேற்பட்ட திருக்கோயில்களின் தெய்வங்களின் ஆசியும் முதலமைச்சருக்கு கிடைக்க வேண்டும் என்றும் சங்க நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர். தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் புதிய அரசு சிறப்பாக செயல்பட்டு, மக்கள் நல மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதேநேரத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் செயல்படும் திருக்கோயில்கள் தொடர்பாக சங்கம் பல்வேறு முக்கிய கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளது. முன்னோர்கள் உருவாக்கிய திருக்கோயில்களுக்கு அவர்களது வாரிசுகள் மட்டுமே பரம்பரை அறங்காவலர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றும், பரம்பரை அறங்காவலர்களை சட்டபூர்வ நிர்வாகிகளாக இந்து சமய அறநிலையத்துறை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

மேலும், மாநில மற்றும் மண்டல அளவிலான திருக்கோயில் நிர்வாக மற்றும் இருப்பணி குழுக்களில் பரம்பரை அறங்காவலர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், இந்து சமய அறநிலையத்துறையின் உயர்மட்ட குழுக்களிலும் தமிழ்நாடு திருக்கோயில் பரம்பரைஅறங்காவலர்கள் சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த கோரிக்கைகள் தொடர்பாக தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

## அரசு மருத்துவமனையில் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி செயல்படாமல் உள்ள அம்மா உணவகத்தை மீண்டும் திறக்க வேண்டும் என வலியுறுத்தி மெய்வழி மக்கள் இயக்கம் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை



தேனி அருகே கானா விளக்கு பகுதியில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது இங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்

இவர்களுக்காக அரசு மருத்துவமனை வளாகத்திற்கு உள்ளே செயல்பட்டுவந்தஅம்மா உணவகம் கடந்த சில ஆண்டுகளாக முறையான பராமரிப்பு இன்றி திறக்கப்படாமலேஇருந்துள்ளது இதனால் அரசு மருத்துவமனைக்கு வரும் ஏழை எளிய மக்கள் மருத்துவமனை வெளியே சென்று அதிக விலைக்கு உணவை வாங்கும் நிலை உள்ளது இதனால் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்

இந்த நிலையில் மெய்வழி மக்கள் இயக்கம் சார்பில் அரசு மருத்துவமனையில் உள்ள அம்மா உணவகத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி தேனி மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வெளியே அதிக விலைக்கு உணவு வாங்க முடியாத நிலை உள்ளதாகவும், எனவே அம்மா உணவகத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என கோரிக்கை வைத்தனர்

இது குறித்து மாவட்ட நிர்வாகத்திடமும் மருத்துவமனை நிர்வாகத்திடமும் பலமுறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்தனர்

மேலும் தேனி மாவட்டத்தில் ஒரு சில அரசு டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டாலும், மன மகிழ் மன்றம் என்ற பெயரில் தனியார் மதுபான கடை 24 மணி நேரமும் செயல்பட்டு வருவதாகவும் இதனால் பொதுமக்கள், பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என்றும் இது குறித்தும் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்

## ஈரோடு பாசூர் அரசு மேல்நிலைப்பள்ளி 10 ஆம் வகுப்பு பொது தேர்வில் 98.3 % தேர்ச்சி



ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் பாசூர்அரசு மேல்நிலைப் பள்ளியானது 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மாணவ,மாணவிகளுக்கு தரமான கல்வியை வழங்கி முன்னணி பள்ளியாக திகழ்ந்து வருகிறது. 458/500மதிப்பெண் பெற்று எஸ். ஸ்ருதிஎன்றமாணவி பள்ளியில் முதலிடம், 454/500 மதிப்பெண் பெற்று எஸ். தனுஸ்ரீ என்ற மாணவி பள்ளியில் இரண்டாவது இடமும், 451/500 மதிப்பெண்கள் பெற்று எஸ்.என்.அஸ்விந்த் என்ற மாணவன் பள்ளியில் மூன்றாவது இட மும் பெற்று சாதனை படைத்துள்ளனர். சிறப்பாக தேர்வு எழுதிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் அதற்கு உறுதுணையாக இருந்த தலைமை ஆசிரியர் மற்றும் இருபால் ஆசிரியர்பெருமக்களுக்கு ஊர் பொதுமக்கள், பெற்றோர் ஆசிரியர் கழகம் முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளை நன்றிகளையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

## பழவேற்காடு கடலில் மீன்பிடி வலையில் 2ம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட பீரங்கி குண்டு சிக்கியது

பொன்னேரி: பழவேற்காடு பகுதி கடலில் மீன் பிடி வலை யில் சிக்கிய 2-ம் உலகப் போரில் பயன் படுத்தப்பட்ட பீரங்கி குண்டால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பொன்னேரி அருகே உள்ள பழவேற்காடு, அதையொட்டி உள்ள 30-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில்,நேற்று முன் தினம் இரவு, பழவேற்காட்டை அடுத்த பசியாவரம் மீனவ கிராமத்தைச் சேர்ந்த தேவபிரகாஷ் (35), 4 பேருடன் பழவேற்காடு பகுதியில், வங்காள விரிகுடா கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப் போது மீன் பிடி வலை யில், துருப்பிடித்த நிலையில் ஒரு அடி உயரம் மற்றும் 10 கிலோ எடை உள்ள இரும்பாலான உருளைபோன்ற மர்மப் பொருள் சிக்



கியது.அதிர்ச்சியடைந்த தேவபிரகாஷ், திருப்பாலைவனம் போலீஸாருக்கு தகவல் அளித்துவிட்டு,மர்மப்பொருளுடன் பழவேற்காடு, கடற்கரைக்கு திரும்பினார். அங்கு விரைந்த போலீஸார், மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப்பொருளை மீட்டனர் .ஆவடி, வெடிகுண்டு நிபுணர்களின் சோதனையில், மீன்பிடி வலையில் சிக்கிய மர்மப் பொருள், 2- ம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட பீரங்கி குண்டு என்பது தெரிய வந்தது.

இதையடுத்து, போலீஸார், திருப்பாலைவனம் பகுதியில் திறந்தவெளியில் பள்ளம் தோண்டி, பாதுகாப்பான முறையில் பீரங்கி குண்டை புதைத்து வைத்துள்ளனர்.

மேலும், இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள போலீஸார், பீரங்கி குண்டு குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல்செய்து,பிறகு நீதிமன்ற அனுமதியுடன் பீரங்கி குண்டை செயலிழக்கவைக்கநடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.



ஈரோடு மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன் தலைமையில் நேற்று (20.05.2026) ஈரோடு மாநகராட்சி கூட்ட அரங்கில் பொது சுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் பெரிய அளவில் கழிவுகளை வழங்கும் அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்கள், நிறுவனங்கள், ஹோட்டல் உரிமையாளர்கள். உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில் நேற்று (20.05.2026) ஈரோடு மாநகராட்சி கூட்ட அரங்கில் பொது சுகாதாரப் பிரிவு அலுவலர்களுடனான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர நல அலுவலர் மரு.கௌரி சரவணன், சுகாதார அலுவலர் மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ம.விஜய் பாலாஜி அவர்களை கொடுமுடி ஒன்றியதுக்கு உட்பட்ட பேரூர் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் நேரில் சந்தித்து தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் நேற்று (20.5.2026) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 4, கொல்லம்பாளையம் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் உணவின் தரம் மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். உடன் உதவி செயற்பொறியாளர் முருகானந்தம் உட்பட அலுவலர்கள் உள்ளனர்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சி 8வது வார்டில் இரண்டு முறை கவுன்சிலராக இருந்த முன்னாள் திமுக பிரமுகர் சிவகுமார், தனது ஆதரவாளர்களுடன் சென்று பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி முன்னிலையில் சால்வை அணிவித்துத் தமிழக வெற்றிக் கழகத்தில் (தவெக) தன்னை இணைத்துக் கொண்டார்.

# Thailand scraps its 60day free visa policy for 90 countries: What it means for Indian travellers?




*Thailand has scrapped its 60-day visa-free policy for all 93 countries previously awarded this benefit, including India, in a move aimed at tightening security checks and curbing crimes involving foreign nationals. For Indian travellers, this is expected to mean a return to the earlier 30-day visa-free stay arrangement that existed before Thailand expanded the exemption period in July 2024.*

*The announcement was made through a social media post on the Thailand government's X account.*

*"Thailand is scrapping its 60-day visa-free policy for 90+ nations. Entry rules will revert to original bilateral terms – varying by passport. Reason: tighter security screening and cracking down on overstays. The Visa Policy Committee will review each country individually," the post read. The decision comes amid a series of high-profile cases involving foreigners allegedly linked to drug offences, sex trafficking, and operating businesses such as hotels and schools without proper permits. Thai authorities have said some visitors were exploiting the extended visa-free regime to stay longer in the country illegally.*

*Why has this move been taken? As per the official website of the Thailand government's PR department, the decision was made on May 19 in view of national security, tourism and economic interests, reciprocity, reduction of overlapping visa privileges that may cause confusion for travellers, and the convenience now offered by the E-Visa mechanism.*

*Thailand foreign minister Sihasak Phuangketkeow said last week that the move was part of a broader crackdown on transnational crime. The government clarified that the policy change was not directed at any specific country, but at individuals abusing the visa system.*

*Tourism minister Surasak Phancharoenworakul said both security and economic factors would be weighed while revising visa criteria. Government spokesperson Rachada Dhanadirek added that while tourists contribute significantly to the economy, the current system had allowed some people to misuse the extended stay provisions.*

*Thailand's cabinet on Tuesday approved reducing visa-free stays for travellers from more than 90 countries, including the 29-nation Schengen area, the United States, Israel and several South American countries. The new visa-free duration will now be decided on a country-by-country basis.*

*According to Surasak, most foreign nationals are expected to receive visa-free stays of up to 30 days, while some countries may be granted only 15 days. Travellers will still be allowed to renew their visas once through immigration offices, though extensions will no longer be automatic and will depend on officers being satisfied with the reason for a longer stay.*



ஆன்லைனில் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்யக்கோரி, நேற்று நாடு தழுவிய மருந்துக் கடைகள் அடைப்பு போராட்டம் நடைபெற்றது. ஈரோட்டில் சத்தி ரோடு, பேருந்து நிலையம் மற்றும் சூரம்பட்டி நால்ரோடு பகுதிகளில் உள்ள மருந்து கடைகள் முற்றிலும் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் அவசரத் தேவைக்கு மருந்துகள் மற்றும் மாத்திரைகள் வாங்க முடியாமல் நோயாளிகள் மிகுந்த அவதிக்கு உள்ளாகினர்.



தமிழக வெற்றிக் கழகத்தின் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர் கௌதமன் மற்றும் கொடுமுடி ஒன்றிய செயலாளர் ராம் பிரகாஷ் முன்னிலையில் கொடுமுடி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூர் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் தங்கள் பகுதியின் நீண்டகால பிரச்சினைகளை பற்றிய கோரிக்கைகளை அவர்களிடம் அளித்தனர். இதில் கொடுமுடி ஒன்றிய பொருளாளர் தளபதி செல்வா , பாசூர் பேரூர் செயலாளர் மு.ஞானசேகரன், கிளாம்பாடி பேரூர் செயலாளர் அருண்குமார், வெள்ளோட்டாம்பரப்பு பேரூர் செயலாளர் சண்முகம், கொளாநல்லி ஊராட்சி செயலாளர் அம்சு சுப்ரமணி, எழுநூத்திமங்கலம் ஊராட்சி செயலாளர் வடிவேல் ஆகியோர் கோரிக்கைகளை அளித்தனர்.



ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் அறிவிப்பின்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, வார்டு எண் 7, பி.பெ.அக்ரஹாரம் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் உணவின் தரம் மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து செயற்பொறியாளர்கள் ஆனந்தன் மற்றும் பிச்சை முத்து ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.